Written by Administrator
Thursday, 01 August 2013 00:00 -

□□□□□□□□□□□□□ □□□□□: 44□□□□□ □□□□□: 12□□□□□ □□□□□□□ 2013

சிறந்த நடைமுறைகள்

இந்தியாவில் மகளிருக்கு அரசியல் அதிகாரம்: உள்ளடக்கிய ஜனநாயகத்தை வென்றெடுப்பதற்கான பாதை

– டாக்டர் மதுஸ்ரீ தால்குப்தா சாட்டர்ஜி

"அரசு நிர்வாகத்தில் பங்கேற்கவும், எதிர்ப்புகளைத் தெரிவிக்கவும், முடிவுகளை எடுக்கவும், சமூக மற்றும் பொருளாதார பொறுப்புடைமையை உறுதி செய்யவும், சமுதாயத்தின் அனைத்து பிரிவுகளையும் சேர்ந்த மக்களுக்கு அதிகாரம் அளிக்கப்படும் போது தான், உள்ளடக்கிய ஜனநாயகம் என்பது முறையாக செயல்படத் தொடங்கும். ஜனநாயகம் மீதான இத்தகைய பார்வைக்கு செயல்வடிவம் கொடுக்க வேண்டுமானால், அடிமட்டத்தில் இருந்து அதிகாரப் பகிர்வு அளிக்கப்பட வேண்டியதும், சாதாரண மக்களுக்கு அதிகாரத்தை உண்மையாக பகிர்ந்தளிக்க வேண்டியதும் அவசியமாகும். இந்திய ஜனநாயகத்தின் உண்மையான உறுதிமொழி என்பது உள்ளடக்கிய, இயல்பான ஜனநாயகத்தை உருவாக்குவது தான். இந்த இலக்கை எட்டுவதற்கு உள்ளூர் சுயாட்சி தான் முக்கியமான கருவியாக இருக்கும்".

ஜனநாயக நடைமுறையில் அனைவரும் பங்கேற்பதையும், இந்த நடைமுறையில் எவரும் விடுபடாமல் இருப்பதை உறுதி செய்வதும் தான் உள்ளடக்கிய ஜனநாயகம் ஆகும். இதற்கு ஒதுக்கப்பட்ட சமுதாயத்தினரை குறிப்பாக, பெண்களை அரசியல் நடைமுறையில் உள்ளடக்குவதை உறுதி செய்யும் வகையிலான சமுதாயத்தை மறுவடிவமைப்பு – மறு வரையறை செய்வதற்கான திட்டத்திற்கு என்னென்ன வழிமுறைகளை பின்பற்ற வேண்டுமோ, அந்த வழிமுறைகள் அனைத்தையும் மாற்றியமைக்க வேண்டியது அவசியமாகும்.

உள்ளடக்கிய ஜனநாயகம் என்பது, நேரடி அரசியல் ஜனநாயகத்திற்கான நிபந்தனை மற்றும் சமூகத்துடன் பொருளாதாரம், அரசியல், இயற்கை ஆகியவற்றை மறு ஒருங்கிணைப்பு செய்வதற்கான சமூக அமைப்பின் வடிவம் ஆகும். தொன்மையான ஜனநாயகம், சோசலிசம் ஆகிய இரண்டு பெரிய வரலாற்று பாரம்பரியங்களில் இருந்து உள்ளடக்கிய ஜனநாயகம் என்ற தத்துவம் பெறப்பட்டதாகும். சாதாரண உரிமை என்பதைத் தாண்டி, பங்கேறு உரிமைகளை உள்ளடக்கிய மனித உரிமைக்கும், ஜனநாயகத்திற்கும் இடையே நெருங்கிய உறவு இருப்பது தெளிவாகத் தெரியும். இருப்பவர்களுக்கும், இல்லாதவர்களுக்கும் இடையிலான இடைவெளியை குறைப்பதற்கு உள்ளடக்கிய மாதிரி அவசியமாகிறது. இது, சட்டப்படியான ஜனநாயகத்தை மேம்படுத்துவதற்கான சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வது மட்டுமின்றி, சமூக மற்றும் அரசியல் தளங்களில் தங்களின் குரல்களை எழுப்புவதற்கான சட்டப்பூர்வ உரிமையும், நிறைமையும் உள்ளது என்பதை பெண்கள் உணர்ச் செய்வதையும் உள்ளடக்கியதாகும்.

எனவே, வலிமையான ஜனநாயகம் என்பது ஏற்றத் தாழ்வுகளை குறைப்பதற்கும், சமூக பதற்றத்தையும், சமூகத்தில் நிலவி வரும் பிரிவினைகளையே நிலையும் கோபத்தையும் கட்டுப்படுத்துவதற்காக பணியாற்றும் ஒன்று என, நாம் கூறலாம்.

இந்திய அரசியல் சட்டம், சாதி, இன, மத, பாலின வித்தியாசமின்றி, அனைவருக்கும் சமத்துவம், சுதந்திரம், நீதி ஆகியவற்றை வழங்க வகை செய்வதால், இந்தியா ஒரு ஜனநாயக நாடு ஆகும். அரசியல் அதிகாரமளித்தல் மூலம் பெண்களை சமூக ரீதியாகவும், பொருளாதார அடிப்படையிலும் வளர்த்தெடுப்பதும் ஜனநாயகம் சார்ந்த விஷயங்களில் ஒன்றாகும். உள்ளாட்சி அமைப்புகள் மட்டத்தில் உள்ள அரசு பதவிகளில் இடஒதுக்கீடு வழங்குவதன் மூலம் பெண்களுக்கு அதிகாரமளிப்பது என்பது, பொது நிறுவனங்களை பாலின சமநிலை கொண்டதாக மாற்றுவதற்கான உள்ளடக்கிய ஜனநாயக விஷயமுறைகளில் இருந்து பெறப்பட்டது ஆகும். இந்தியா உள்ளடக்கிய ஜனநாயகமாக மாற வேண்டுமானால், அதற்கான நம்பத்தகுந்த வழிமுறை அரசியல் அதிகாரம்

டாக்டர் மதுஸ்ரீ தால்குப்தா சாட்டர்ஜி, தேசிய தொழில்நுட்ப ஆராய்ச்சி நிறுவனம், புதுதில்லி.

அளிப்பது தான். இந்த வழிமுறை பெண்களின் பிரச்னைகளை, அவர்களின் பிரச்னைகளாக மட்டும் பார்க்காமல், அரசு நிர்வாகத்தில் போதிய பிரதிநிதித்துவம் இடைக்காத நலிவடைந்த பிரிவினருக்கான பிரதிநிதித்துவத்தையும் அதிகரிக்கச் செய்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தியாவைப் பொறுத்தவரை, அரசியல் செயல்பாடுகள் என்பது ஆண்கள் ஆதிக்கம் செலுத்தக் கூடிய தொழில் என்று வரையறுத்தன் மூலம், அரசியல் வாழ்க்கையில் இருந்து நீண்ட காலமாகவே பெண்கள் ஒதுக்கி வைக்கப்பட்டு வந்தனர். பொது வாழ்க்கையில் ஆண்களும், பெண்களும் சமத்துவமாகவும், சம அளவிலும் பங்கேற்கக் கூடிய உள்ளடக்கிய ஜனநாயகத்தை ஏற்படுத்துவதை நோக்கிய நடவடிக்கைகளில் கடந்த 20 ஆண்டுகளாகத் தான் குறிப்பிடும்படியான முன்னேற்றம் ஏற்பட்டது. எனினும், பாலின பாகுபாடு என்பது இந்திய சமுதாயத்தில் இன்னும் ஆதிக்கம் செலுத்திக் கொண்டிருக்கிறது. அரசியல் நடவடிக்கைகளில் பெண்களும் ஒருங்கிணைக்கப்படுவதை மேம்படுத்துவதற்காக, இன்னும் பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளன.

அரசு நிர்வாகத்தில் பங்கேற்கவும், எதிர்ப்புகளைத் தெரிவிக்கவும், முடிவுகளை எடுக்கவும், சமூக மற்றும் பொருளாதார பொறுப்புடைமையை உறுதி செய்யவும், சமுதாயத்தின் அனைத்து பிரிவுகளையும் சேர்ந்த மக்களுக்கு அதிகாரம் அளிக்கப்படும் போதுதான், உள்ளடக்கிய ஜனநாயகம் என்பது முறையாக செயல்படத் தொடங்கும். ஜனநாயகம் மீதான இத்தகைய பார்வைக்கு செயல்வடிவம் கொடுக்க வேண்டுமானால், அடிமட்டத்தில் இருந்து அதிகாரப் பகிர்வு அளிக்கப்பட வேண்டியதும், சாதாரண மக்களுக்கு அதிகாரத்தை உண்மையாக பகிர்ந்தளிக்க வேண்டியதும் அவசியமாகும். இந்திய ஜனநாயகத்தின் உண்மையான உறுதிமொழி என்பது உள்ளடக்கிய, இயல்பான ஜனநாயகத்தை உருவாக்குவதுதான். இந்த இலக்கை எட்டுவதற்கு உள்ளூர் ஜனநாயக கலாச்சாரம் மற்றும் உள்ளூர் சுய நிர்வாகம் ஆகியவை தான் முக்கியமான வழிமுறைகளாக இருக்கும். அடிமட்ட அளவில் ஜனநாயக நடைமுறையை ஏற்படுத்த வேண்டுமானால், சமூகத்தைத் நிரட்டுவதன் மூலம் ஏழை மற்றும் ஒதுக்கப்பட்ட மக்களின் குரல்கள் கேட்கப்படுவதற்கான சூழலை உருவாக்கவேண்டும். இந்த இலக்கை எட்டுவதற்காக மேற்கொள்ளப்பட்ட சிறிய நடவடிக்கை தான், இந்தியாவில் மூன்றடுக்கு உள்ளாட்சி அமைப்பு ஏற்படுத்தப்பட்டதும், புதுப்பிக்கப்பட்டதும் ஆகும்.

இந்தியாவில் உள்ளடக்கிய ஜனநாயகத்தை எட்டுவதற்கான இலக்கை அடைவதில் 1993ம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட 73வது இந்திய அரசியல் சட்டத்திருத்தம் முக்கிய பங்காற்றியது. இந்த சட்டத் திருத்தத்தின் பயனாக இந்தியாவில் தற்போது 500 மாவட்ட ஊராட்சிகள், 5,100 ஊராட்சி ஒன்றியங்கள், 2,25,000 கிராம பஞ்சாயத்துக்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. இந்த அமைப்புக்களுக்கு 30 லட்சத்திற்கும் கூடுதலான மக்கள் பிரதிநிதிகள் தேர்வு செய்யப்படுகின்றனர். அவர்களில் குறிப்பிடத்தக்க அளவிலானவர்கள் பெண்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

அடிமட்டத்தில் உள்ள உள்ளாட்சிகளில் பெண்கள் அதிகளவில் பங்கேற்பதன் மூலம், உள்ளடக்கிய ஜனநாயக நடைமுறையில், அவர்களின் பங்கேற்பை அதிகரித்தல் மற்றும் அவர்களுக்கும் சம வாய்ப்பு வழங்குவதற்கு 73வது அரசியல் சட்டத் திருத்தம் முக்கிய கருவியாக இயற்றப்பட்டது. ஆண்கள் ஆதிக்கம் செலுத்தும் கிராமப்புற அரசியல் அதிகார கட்டமைப்பு பாரம்பரிய அரசியல் அமைப்புகள் மீதான தங்களின் பிடியை அவ்வளவு எளிதாக விட்டு விடாது என்பதால், கிராமப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு தங்களாலும் தலைமை ஏற்க முடியும் என்ற நம்பிக்கை தொடக்கத்தில் கிராமப் பஞ்சாயத்துகளைச் சேர்ந்த ஒதுக்கப்பட்ட பெண்களுக்கு இல்லை. இத்தகைய சூழலில், பெண்களுக்கு அதிகாரம் அளிப்பதற்கு 73வது அரசியல் சட்டம் மிகப் பெரிய பங்களிப்பை செய்கிறது. உள்ளடக்கிய ஜனநாயகம் என்ற இலக்கை எட்டுவதற்கு பெண்களுக்கு அரசியல் அதிகாரம் அளிப்பது தான் முக்கிய கருவியாக கருதப்படுகிறது.

பங்கேற்பு அல்லது உள்ளடக்கிய ஜனநாயகம் என்ற இலக்கை எட்டுவதில் ஒதுக்கப்பட்ட மற்றும் நலிவடைந்த சமுதாயங்களைச் சேர்ந்த பெண்கள் சாதனை படைத்திருக்கின்றனர். இத்தொடர்பான வெற்றிக் கதைகள் இந்தியா முழுவதும் பரவிக் கிடக்கின்றன. அத்தகைய உதாரணங்களில் ஒன்று தான் பீகார் மாநிலம் முசாபர்பூர் மாவட்டம், காந்தி வட்டம், நாமோதர்பூர் கிராம ஊராட்சியின் தலைவியான 23 வயது அப்சனா பர்வீன் படைத்த சாதனையாகும். 2010ம் ஆண்டில் நாமோதர்பூர்

Written by Administrator
Thursday, 01 August 2013 00:00 -

ஊராட்சித் தலைவியாக முதன்முதலில் தேர்ந்தெடுக்கப்பட்ட அப்சனா பர்வின், "உள்ளாட்சி அமைப்புகளின் செயல்பாடுகளில் பெண்கள் பங்கேற்கத் தொடங்கியதன் மூலம், பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாடு, சுகாதாரம் மற்றும் கல்வி ஆகியவற்றின் முக்கியத்துவத்தை அனைவரும் அறிந்து கொள்ளும் வாய்ப்பு ஏற்பட்டது' என்று கூறினார். இடைநிலை பள்ளிக் கல்வி வரை படித்த அப்சனா, 73வது அரசியல் சட்டத் திருத்தத்தின் மூலம் உள்ளாட்சி அமைப்புகளில் மகளிருக்கு அதிகாரம் அளிப்பது வெற்றி பெற்றிருக்கின்றது என்பதை உறுதியாக நம்புகிறார். "ஒரு காலகட்டத்தில் பெண்கள் கதவுக்கு பின்னால் நின்று கொண்டு தான் மற்றவர்களுடன் உரையாடுவார்கள். தற்போது பெண்கள் பொறுப்பான மற்றும் அதிகாரம் கொண்ட பதவிகளில் அமர்ந்திருக்கிறார்கள். மத்திய அரசின் ஆதரவுடன் செயல்படுத்தப்படும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டம் போன்ற திட்டங்களின்படி செயல்படுத்தப்படும் வளர்ச்சிப் பணிகளைக் கண்காணிக்கவும், பள்ளிகளில் ஆய்வு செய்யவும் வெளியில் செல்லும் நிலை ஏற்பட்டிருக்கின்றது" என்று பெருமிதத்துடன் கூறுகிறார் அப்சனா. தமது அன்றாட வீட்டுப் பணிகளைச் செய்யும் அப்சனா, அதன்பின்னர் சமூக மேம்பாட்டு நிட்டப் பணிகளை பார்வையிடுதல், கூட்டங்களில் பங்கேற்றல் ஆகிய பணிகளையும் செய்கிறார். இதற்கெல்லாம் மேலாக பெண்களிடம் மட்டுமின்றி, ஆண்களிடமும் குறைகளைக் கேட்கிறார். தமது கணவர் பர்வேஸ் ஆலமின் ஆதரவும், உதவியும் இல்லாமல் இவையெல்லாம் தமக்கு சாத்தியமாகியிருக்காது என்றும் அப்சனா தெரிவித்துள்ளார்.

மூன்று குழந்தைகளுக்கு தாயான அப்சனா, அடிமட்டத்தில் உள்ள மகளிர் மக்கள் பிரதிநிதிகள் தங்களது கடமைகளையும், பொறுப்புகளையும் செய்வதில் ஏராளமான இடையூறுகளைச் சந்திப்பதாகக் கூறுகிறார். உள்ளாட்சி அமைப்புகளில் பெண்கள் சிறப்பான முறையில் பங்கேற்பதற்கான முட்டுக்கட்டையாக நிலவுவது இது தான். பெண்களுக்கு ஏற்படும் இடையூறுகளுக்கு அவர்களின் கல்வியறிவின்மை, அதிகாரிகள், சமுதாயம் மற்றும் குடும்ப உறுப்பினர்களின் போக்கு, தங்களது பணி தொடர்பான நடைமுறைகள் குறித்த அறிவு இல்லாதது ஆகியவை காரணமாக இருக்கலாம். பீகார் மாநிலத்தில் உள்ள பல்வேறு பிராம பஞ்சாயத்துக்களில் ஏராளமான பெண்கள் பிரதிநிதிகளாக இருக்கும் போதிலும், அவர்களில் பெரும்பாலானோர் பர்தா முறை காரணமாக மற்றவர்களிடம் பேசுவதற்கோ, தங்களின் அனுபவத்தைப் பகிர்ந்து கொள்வதற்கோ மறுத்துவரும் நிலையில், ஆச்சாரமான சமுதாயத்தைச் சேர்ந்த அப்சனா தமது அனுபவத்தை பகிர்ந்து கொள்ள முன்வருவது விதிவிலக்கான உதாரணமாகும். தாமோதர்பூர் பகுதியில் உள்ள பெண் மக்கள் பிரதிநிதிகளில் பலர் தொடர்ந்து பணியாற்றுவதில்லை. அவர்களுக்குப் பதிலாக, அவர்களின் கணவர்கள் தான் பணியாற்றுகின்றனர். உள்ளாட்சி நடைமுறையில் போலி பங்கேற்பின் அடையாளமாகவே இந்த பெண்கள் திகழ்கின்றனர். உள்ளாட்சி அமைப்புகள் உருவாக்கப்பட்டதன் நோக்கமே, அவை மக்களுக்கு மிகவும் பயனுள்ளதாக அமைய வேண்டும் என்பது தான். இதற்காகத் தான் ஜனநாயகத்தின் அடிப்படை அமைப்புகளாக இவை ஏற்படுத்தப்பட்டன.

ஒரு நாடு, உள்ளடக்கிய ஜனநாயகத்தை அதன் உண்மையான அர்த்தத்துடன் ஏற்படுத்த வேண்டும் என்று விரும்பினால், அந்நாட்டு சமுதாயத்தின் பல்வேறு நிலைகளில் உள்ள பெண்களுக்கு அதிகாரம் அளிக்க வேண்டும்.

இத்தியப் பெண்கள், ஆண்களுடன் இணைந்து வாக்களிக்கும் உரிமையையும், கிராம பஞ்சாயத்து முதல், நாடாளுமன்றம் வரையிலான ஜனநாயக அமைப்புகளின் தேர்தலில் போட்டியிடும் வாய்ப்பையும் பெற்ற போதிலும், அவர்கள் பெரும்பாலும் அதிகாரமளிக்கப்படாதவர்களாகவே உள்ளனர். அதுமட்டுமின்றி, உள்ளாட்சி அமைப்புகளுக்கு பெண்கள் தேர்ந்தெடுக்கப்பட்டாலும், அவர்களுக்குப் பதில், அவர்களது கணவர்களே அனைத்துப் பணிகளையும் செய்வதாலும், இவர்கள், வெறும் 'ரப்பர் ஸ்டாம்ப்'பாக இருப்பதாலும், உள்ளடக்கிய ஜனநாயகத்தில் இருந்து பெண்கள் விலக்கி வைக்கப்பட்டிருப்பதையும் நம்மால் பார்க்க முடிகிறது. எனவே, நமது இப்போதைய உடைந்த தேனவே என்னவென்றால், உள்ளடக்கிய ஜனநாயகம் வெற்றி பெறுவதற்காக நாம் அனைவரும் ஒன்றுபட்டு, பின்தங்கிய மக்களுக்காக வாய்ப்புகளை உருவாக்கித் தருவது தான். ●